# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் frmichaelsitaram@gmail.com | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **21 ஏப்ரல் 2019** | **ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா** | **மூன்றாம் ஆண்டு** |



# உங்கள் சிந்தனைக்கு...

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது; ஆர்ப்பரித்து அகமகிழ வேண்டிய நாளிது. வெற்றி விழாவாகிய ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழாவிற்கு அழைக்கப்பட்டிருக்கும் அன்புள்ளங்களை அக்களிப்போடு வரவேற்கிறோம்.

மரணத்தை வென்றவரின் மக்களாகிய நாம், அவரது மனத்தை நம்மிலே உருவாக்குவோம். சிலுவையின் பாடுகள் சிதைத்த போதும் சிறிதும் வெகுளாமல் தந்தையின் திருவுளம் நிறைவேற்ற சிந்தையை தயாராக்கினார் இயேசு. கடலைத் தேடி நதிகள் பாய்கின்றன. பொருளைத்தேடி மனிதன் ஓடுகின்றான். அகிலமெல்லாம் படைத்த இறைவா, நீர் என்னைத் தேடி வந்ததேனோ? என்று நம் உள்ளங்கள் இன்று ஒலிக்கின்றன. நமது பாவங்களை சிலுவையில் மரணிக்கச் செய்து, மனமகிழ்ச்சியை உயிர்ப்பித்த இந்நாளிலே மனுமகனின் உயிர்ப்பு விழாவை உவப்புடன் கொண்டாட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

பாரினையே படைத்த பரமதந்தையின் மகன் உயிரற்ற உடலாய் ஒடுங்கியது அடுத்தவருக்குச் சொந்தமான கல்லறையில்தான். இந்த உலகில் வாழ்ந்த சொற்ப ஆண்டுகளில் கூட அற்புதங்களைத் தவிர வேறெதுவும் செய்யவில்லை. அத்தகைய அன்பே உருவானவரை அடையாளப்படுத்தும் வாழ்க்கையை நாம் வெளிப்படுத்தும் போது தான் உயிர்ப்பு விழா உயிரோட்டமுடையதாகிறது.

இயேசு உயிர்க்கும் வரை மறைநூல் உண்மையை சீடர்கள் கூட நம்பவில்லை. வெறுமையான கல்லறையை பார்த்த பின்பும், **“உங்களுக்கு அமைதி உண்டாகுக!“** என்ற வார்த்தைகளை கேட்ட பின்பு தான் விசுவாசம் மேலோங்க பரிசுத்த ஆவியால் தூண்டப்பட்டு நற்செய்தியை பறைசாற்றுகின்றனர்.

இவ்வுலகில் மனிதர் எல்லோரும் நிறத்தாலும், பணத்தாலும் வேறுபட்டிருப்பினும், குணத்தாலும் மனத்தாலும் உயர்ந்து நின்று, தாழ்நிலையில் தள்ளாடுபவனுக்கு தோள் கொடுக்கும்போது, இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா ஒளி நம்முள் ஏற்றப்படுகிறது. உயிர்த்த இயேசு அனைவரையும் பார்த்துக் கூறிய முதல் வார்த்தை, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!“. நாமும் நம்மிலும் நம்மைச் சுற்றியிருப்பவர்களிடமும் அறியாமைமையை அகற்றி, அறிவைப் புகுத்தி, அன்பை ஆழமாக்கி, அமைதியை ஏற்படுத்தி, இயேசுவின் அர்த்தமுள்ளதாக்குவோம் என்ற நம்பிக்கையோடு திருப்பலியில் இணைவோம்.

**அனைவருக்கும் நம் ஆண்டவரின் உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்கள்!**




இறைமக்கள் அனைவருக்கும் பங்குத் தந்தை மற்றும் உதவிப் பங்குத் தந்தையர்கள் சார்பாக, ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வருகின்ற ஜூலை மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக "Church of Our Lady of Lourdes" என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் "Building Fund" என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




## ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணி

**நாள்: 28-04-2019, ஞாயிறு மதியம் 2:30 மணி**

ஆலயத் துப்பரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு, நமது ஆலயம் மதியம் 2:30 முதல் 4:00 மணிவரை மூடப்பட்டிருக்கும். வாருங்கள்! நமது ஆலயத்தை தூய்மைப்படுத்த தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு

நமது சிங்கப்பூர் உயர் மறைமாவட்டத்தின் புதிய நற்செய்தி அறிவிப்பு மையத்தினால், உயிர்ப்புக்கால ஆன்மீக கையேடு தமிழ் மொழியில் தயார் செய்யப்பட்டு நமக்காக வழங்கப்பட்டுள்ளது. தயவு செய்து அனைவரும் ஒரு பிரதியை எடுத்துச் சென்று பயன்பெறவும்.

ONE
OFFICE FOR THE NEW
EVANGELISATION

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்




வருகின்ற ஏப்ரல் 25ம் தேதி (வியாழக் கிழமை), நமது அன்புத் தந்தை நித்திய சகாயராஜ் அவர்கள் தனது பிறந்த தினத்தை இறைவனுக்கு நன்றிகூறி கொண்டாடுகின்றார். அவரை வாழ்த்துவதோடு அவரது பணிக்காக தொடர்ந்து செபிப்போம்.

## இறை இரக்கத் திருவிழா 2019




தமிழில் 26 & 27 ஏப்ரல் 2019 (வெள்ளி, சனி) இரவு 7 மணி மற்றும் 28 ஏப்ரல் 2019 (ஞாயிறு) மாலை 6 மணிக்கு இறை இரக்க நவநாளும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும். அனைவரும் கலந்து கொண்டு இறை இரக்க ஆண்டவரின் ஆசீர் பெற அன்புடன் அழைக்கின்றோம்.

**- தூய லூர்து அன்னை ஆலய இறை இரக்க செபக்குழுவினர் -**

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில்** இரவு 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| **முதல் வாசகம்:** | திருத்தூதர் பணி 10: 34, 37-43 |
| **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 118: 1-2, 16-17, 22-23 |
| **பதிலுரை:** | ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே; இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம். |
| **இரண்டாம் வாசகம்:** | கொலோசையர் 3: 1-4 |
| **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார். ஆகையால் நாம் ஆண்டவரின் பாஸ்காவைக் கொண்டாடுவோமாக. அல்லேலூயா. |
| **நற்செய்தி வாசகம்:** | யோவான் 20: 1-9 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

